22.07.2025

OS No: 73/2022

வா.சா. 5 திரு. வெங்கடேஸ் த/பெ கார்த்திகேயன்,

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தாவா வழக்கின் வாதி என்னுடைய மனைவின் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். எனக்கு எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் 2000 வருடத்தில் நடைபெற்றது. திருமணம் எனக்கு முடிந்த பின்னர் எனது சொந்த ஊரில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். அய்யா பட்டியில் என்ன நடக்கிறது என எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தை யார் கிரையம் வாங்கியது என்றால் ராமசாமி வாங்கினார் மேற்படி ராமசாமி தாவா வழக்கின் வாதி ராகவியின் மாமனார் ஆவார். தாவா சொத்தை கிரையம் வாங்கிட ராமசாமிக்கு பணம் எவ்வாறு கிடைத்தது என்றால் ராமசாமி மகன் கொடுத்தார். ராமசாமி மகன் பணத்தை யாரிடம் கொடுத்து விட்டார் என்றால் தெரியாது. ராமசாமி மகன் எவ்வளவு பணம் கொடுத்தார் எந்த எந்த தேதிகளில் கொடுத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி ராகவியின் கணவர் பெயர் என்ன என்றால் செந்தில். தாவா சொத்து வாங்கிய காலத்தில் மேற்படி செந்தில் எங்கு இருந்தார் என்றால் சிங்கப்பூரில் இருந்தார். செந்திலின் சகோதரர் ரவி மேற்படி காலத்தில் எங்கு இருந்தார் என்றால் தெரியாது. நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் திண்டுக்கில்லில் அரிசி கடையில் 2020ம் வருடத்தில்இருந்து வேலை பார்க்கிறேன். அதற்கு முன்னால் என்ன வேலை பார்தேன் என்றால் சிங்கப்பூரில் வேலை பார்த்தேன். சிங்கப்பூரில் எத்தனை வருடங்களாக வேலை பார்த்தேன் என்றால் 20 வருடங்களாக வேலை பார்த்தேன். எனது நிரூபண வாக்குமூலம் பாரா 3ல் பிரதிவாதியும் அவரது மகன் ஹரியும் சேர்ந்து என்னை தாக்கி விட்டனர் என குறிப்பிட்ட சங்கதியில் மேற்படி இருவரும் என்னை எங்கு வைத்து எந்த தேதியில் தாக்கினார்கள் என்றால் என்னை யாரும் தாக்கவில்லை. தாவா சொத்தின் வடபுறத்தில் 2017ம் வருடமே ஒரு கூரை கொட்டகை இருந்தது என்றால் சரிதான். மேற்படி கூரை கொட்டகைக்கு முகப்பில் கடை ஒன்று இருந்தது என்றால் சரிதான். மேற்படி கடை எந்த வருடம் கட்டப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி கடைக்கு மின் இணைப்பு எந்த வருடம் கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது. மேற்டிப கடைக்கு வரி யார் பெயரில் ஏற்பட்டது என்றால் பிரதிவாதியின் பெயரில் இருந்ததாக சொன்னார்கள் யார்

சொன்னார்கள் என்றால் வாதி ராகவி சொன்னார். பிரதிவாதி மற்றும் அவரது மகன் ஆகியோர் சேர்ந்து வாதியை அடித்தாக சொல்வதில் எங்கு வைத்து எந்த தேதியில் அடித்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. போன் மூலமாக அடித்தாக சொன்னார்கள். பிரதிவாதி தாவா கடைக்குள் அத்துமீறி நுழைந்ததாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்ட சங்கதியை எந்த தேதி பிரதிவாதி அவ்வாறு நுழைந்தார் என்றால் 16.12.2021ம் தேதி பிரதிவாதி அத்துமீறி நுழைந்ததாதகா போன் மூலம் சொன்னார்கள். நிரூபண வாக்குமூலத்தில் சொன்ன சங்கதிகள் முலுவதும் பிரதிவாதி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. சில சங்கதிகள் எனக்கு நேரடியாகவும் தெரியும். சில சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியும் என வாதி எனக்கு கொழுந்தியா என்பதற்காக பொய்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் மாமனாருக்கு பாத்தியப்பட்ட எந்த சொத்தையும் இது வரை பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பிரதிவாதியின் கணவர் வெளிநாட்டில் இருந்து அனுப்பிய பணத்தின் மூலமாக கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதியின் கணவர் பணம் கொடுத்து தாவா சொத்து வாங்கப்பட்டது. வாதியின் கணவர் பணம் கொடுக்கவில்லை என்றும் பிரதிவாதிகள் கொடுத்த பணத்தின் பெயரில் தான் தாவா சொத்து கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொதுக்குடும்பத்திற்காக தகப்பனார் பெயரில் கிரையம் பெற்றதால் தான் 2015ம் ஆண்டு தகப்பனார் 3 மகன்களுக்கு சரிபாதியாக ஆளுக்கு 4 செண்டு வீதம் பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன் பிறகு பிதிவாதி தாவா சொத்தின் வட புறம் கூரை குட்டகை அமைத்தும் கடை கட்டியும் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தல் அமைந்துள்ள டவருக்கான வாடகை பணத்தை வாதி ராகவி தான் ஆரம்பம் முதல் பெற்று வருகிறார் என்றால் சரிதான். வழக்கு பற்றி விவரம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது வாதி எனக்கு கொழுந்தியாள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R Pandy Digitally signed by R Pandy Date: 2025.07.22 17:44:02 +0530